# இறைதூதர்களை எதிர்த்தோரின் தண்டனைகள்

1. நூஹ் நபி அலைஹிஸ்ஸலாம்மி ன் கூட்டத்தினர் தூஃபான் என்னும் பெருவெள்ளத்தால் அழிக்கப்பட்டனர். (ஆதாரம்: அல்குர்ஆன்29:14)

2. ஹூத் நபி அலைஹிஸ்ஸலாம்மின் ஆது கூட்டத்தார் ஏழு இரவுகளும் 8 பகல்களும் தொடர்ந்து பேரொலியோடு வேகமாகச் சுழன்று அடித்த கொடுங்காற்றினால் சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டனர்.

(ஆதாரம்: அல்-குர்ஆன்:46:24,25) (69:6,7)

3. ஸாலிஹ் நபி அலைஹிஸ்ஸலாம்மின் தமூத் கூட்டத்தார் எச்சரிக்கப்பட்ட பின்னர் மூன்று நாள்கள் கெடுவில் வானத்திலிருந்து ஏற்பட்ட இடிமுழக்கங்களால் மாண்டு அதிகாலையில் பிணங்களாகக் கிடந்தனர்.

(ஆதாரம்: அல்-குர்ஆன் 11:67)

4. லூத் நபி அலைஹிஸ்ஸலாம்மின் மக்கள் செங்கல் மழை பொழியப்பட்டு ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மூலம் ஊரையே தலைகீழாக கவிழ்க்கப்பட்டது.

(ஆதாரம்: அல்-குர்ஆன் 11:82,83)

4. மூஸா நபி அலைஹிஸ்ஸலாம்மின் எதிரியான பிர்அவனும் அவனது படையினரும் (பனீ இஸ்ரவேலர்கள்) கடலில் மூழ்கடிக்கப்பட்டனர்.

(ஆதாரம்: குர்ஆன் 11:67)

5. ஷுஐப் நபி அலைஹிஸ்ஸலாம்மின் மத்யன் வாசிகளும் அய்கா வாசிகளும் பூகம்பத்தாலும், கடும் இடி முழக்கத்தாலும் அழிக்கப்பட்டனர்.

(ஆதாரம்: அல்குர்ஆன்: 11:94)

6. தாவூது நபி அலைஹிஸ்ஸலாம்மின் அய்லா கூட்டத்தார் (அஸ்ஹாபுஸ்-ஸப்து) குரங்குகளாக மாற்றப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் மாண்டனர்.

(ஆதாரம்: அல்குர்ஆன்: 7:163)

7. அஸ்ஹாபுர் ரஸ் (கிணற்று வாசிகள்) காற்றால் தூக்கிச் செல்லப்பட்டு கடலில் மூழ்கடிக்ககப்பட்டனர்.

(ஆதாரம்: அல்குர்ஆன்: 25:38,50:12)

8. இல்யாஸ் நபி அலைஹிஸ்ஸலாம்மின் கூட்டத்தினர் (பனீ இஸ்ரவேலர்களில் சிலர்) வானத்திலிருந்து இறங்கிய நெருப்பால் எரிக்கப்பட்டனர்.

9. அஸ்ஹாபுல் உக்தூத் (நெருப்புக் குண்டத்திற்குரியோர்) நம்பிக்கை கொண்டோரை குண்டத்தில் வீசி எறிந்து அவர்களை எரித்த அதே நெருப்பினாலேயே எரிந்து சாம்பலாயினர்.

(ஆதாரம்: அல்குர்ஆன்: 85: 4,5,6,7)

10. அஸ்ஹாபுல் கர்யத் (அந்தாகியா என்னும்) கிராம மக்கள் அடுத்தடுத்து வந்த மூன்று இறைதூதர்களையும் நம்பாது அவர்ளை விரட்டியடித்ததாலும் , அவர்களுக்காக பரிந்துரைக்க வந்த நல்லடியார் ஹபீபுந்நஜ்ஜாரையும் அடித்துக் கொன்றதாலும் அம்மக்கள் ஒரேயொரு இடிமுழக்கத்தால் அழிக்கப் பட்டார்கள்.

(ஆதாரம் அல்-குர்ஆன்: யாஸீன்36:13-29)

**11. தாவூது** நபி அலைஹிஸ்ஸலாம்மின் அய்லா கூட்டததினர் குரங்குகளாக மாற்றப்பட்டு மூன்று நாட்களுக்குப்பின்னர் மாண்டனர்.

**(ஆதாரம் : அல்குர்ஆன் 2:65)**

**12. காரூன்** என்னும் ஆணவக்காரன் மூஸாநபி அலைஹிஸ்ஸலாம்மின் குடுமபத்தைச் சார்ந்தவன். பல கோடிகளுக்கு அதிபதியாக இருந்த மிகப் பெருஞ் செல்வந்தன். இவனது ஆணவத்தாலும் இறைமறுப்பாலும் இவனையும் இவனது செல்வங்களையும் பூமி விழுங்கிவிட்டது.

**(ஆதாரம் : அல்குர்ஆன் 28: 76:82)**

**13. ஹாமான் ஃபிர்**அவனின் முதல் அமைச்சனாவான். காரூனும் இவனும் சேர்ந்து தான் பனீ இஸ்ராயீலின் ஆண்குழந்தைகளை கொன்றொழிக்குமாறு ஃபிர்அவனிடம் கூறினர். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் அறிவுரைகளைக் கேட்காது பிர்அவ்னைத் தடுத்தவனும் இவனே! இறுதியில் ஃபிர்அவனுடன் சேர்ந்து இவனும் அழிந்தொழிந்தான்.

www.bathusha.com

Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**